[திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்] [1994 ஜனவரி 5

(அ) திருப்பாதிரிப்புலியூரில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பாலம் கட்டப்படும்?

மாண்புமிகு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருப்பாதிரிப்புலியூர் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி இரயில்வே மற்றும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை இணைந்து செலவு பங்கீட்டு (Cost sharing) முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பணி 1994–95-ம் ஆண்டு இரயில்வே பணித் திட்டத்திற்கு மாநில அரசால் தென்னக இரயில்வேக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரயில்வேயில் அங்கீகரிக்கப்பட்டால் மேற்படி பாலம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு.

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு) பிரச்சினையை 9.27-க்குக் கொடுத்தீர்கள். அரசாங்கத்திடமிருந்து இந்தப் பிரச்சினையில் எனக்குத் தகவல் வரவில்லை. (குறுக்கீடு) வேறு பிரச்சினையாக இருந்தால் உங்களை எழுப்பச் சொல்லுவேன். நீங்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினை ஜாதித் தகராறு சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதுபற்றிய முழுத் தகவல் (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள், முழுத் தகவல் வராமல் நீங்கள் பிரச்சினையை எழுப்புவதும் அல்லது அதற்கு அரசாங்கம் தற்போது கிடைத்திருக்கிற தகவல் அடிப்படையில் மட்டும் பதில் சொல்வதும் என்றால், அதனாலேகூட வேறு சில பிரச்சினைகள் வரக்கூடும். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: நான், காவல்துறை தலையிட வேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்பது சரி. அதுபற்றிய முழுத் தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்குமேயானால், முழுத்

தகவலையும் இங்கே தெரிவிக்கிறபோது அதனாலே ஒரு பிரச்சினையும் வராது. முழுத் தகவல் வராத நேரத்தில், அரசாங்கத்திற்கு நீங்கள் கொடுத்த அடிப்படையில் சில தகவல்களைப் பெற்றிருக்கலாம். வந்திருக்கிற தகவல் அடிப்படையில் மட்டும் இங்கே ஏதோ ஒரு பதில் சொல்வது அந்தப் பிரச்சினையை இன்னும் அதிகரிப்பதற்கும் வாய்ப்பு உண்டாகலாம். ஆகவேதான் உங்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் எழுப்பிய பிரச்சினையில் அரசாங்கத்திற்கு முழுத் தகவலும் வராத நிலையில் அவர்களும் ஒரு பதில் சொல்லி, அதன் காரணமாகவே நிலைமை வேறு விதத்தில் போவதற்கு வாய்ப்பு உண்டாகலாம். அதற்காகத்தான் நாம் என்ன செய்வது என்றால், இந்த ஜீரோ ஹவர் மென்ஷனில் ஜாதித் தகராறு பிரச்சினைகளை எழுப்பு இல்லை. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் எழுதிக் கொடுத்திருப்பது அதுதான், ஜாதி இந்துக்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட தகராறு, (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் கொடுத்திருப்பதை அரசாங்கத்திற்கு அனுப்பி இருக்கிறேன். எனவே, அரசாங்கம் இதிலே முழு அளவிலே நடவடிக்கை எடுப்பார்கள். (குறுக்கீடு) நீங்கள் எழுப்பிய பிரச்சினையை நீங்கள் முன்னரே கொடுத்திருப்பீர்களேயானால், ஏறத்தாழ 27-12-1993-ல் நடந்த பிரச்சினை, ஒரு வேளை நீங்கள் முன்னரே கொடுத்திருந்தால் இப்பொழுது அரசாங்கம் முழுத் தகவல்களைப் பெற்று வந்திருக்க முடியும். (குறுக்கீடு)

(திரு. ஜி. பழனிசாமி சில ஆவணங்களைக் காண்பித்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதையெல்லாம் இப்போது காண்பிக்கக் கூடாது. அதையெல்லாம் நீங்கள் முன்பே கொடுத்திருக்கவேண்டும், நேற்றுக் கொடுத்திருக்கலாம், இன்றைக்கு 9 மணிக்கு முன்னர் வந்து கொடுத்திருக்கலாம். (குறுக்கீடு) 27-12-1993-ல் நடந்ததை நீங்கள் நேற்று, நேற்றைக்கு முந்தைய நாள் கொடுத்திருக்கலாம். அல்லது இன்று 9 மணிக்கு முன்னர் கொடுத்திருந்தாலும் இப்போது பிரச்சினையை எழுப்புவதற்குச் சரியாக இருக்கும். (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள். நான் பதில் சொல்லிவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) என் கவனத்திற்குக் கொண்டுவருவது என்பது வேறு. நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுசென்று அரசாங்கத்திலிருந்து பதில் வாங்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பிரச்சினையை எழுப்பித்தான் தீரவேண்டும் என்கிறபோது, நேற்றுச் கொடுத்திருக்கலாம், நேற்றைக்கு முந்தைய தினம் கொடுத்திருக்கலாம், இன்று 9 மணிக்கு முன்னராவது கொடுத்து இருக்கலாம். உங்களுக்கு உரிமை இருக்கிறது. இன்றைக்கு 9 மணிக்குப் பின்னர் வந்து கொடுத்துவிட்டு, நான் இதை எழுப்பியே தீரவேண்டும் என்று கேட்பது நியாயமல்ல, உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் ஜாதிக் கலவரம் என்ற ஒன்று ஏற்பட்டாலும் யாருடைய அறிவுறுத்தலுக்கும் ஆணைகளுக்கும் காத்திருக்காமல், காவல்துறையினர் தாமாகவே அந்தப் பகுதிக்கு விரைந்து சென்று அமைதியை மீண்டும் அங்கே நிலை நாட்டுகிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பினால், அதைக் கடிதமாக என்னிடத்தில் கொடுத்தால் காவல் துறையைத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி ஆணையிட ஏதுவாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

(அ) தவறான மதிப்பெண் பட்டியல் கொடுத்து மருத்துவக் கல்லூரிகளில் சில மாணவர்கள் சேர்ந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. க. அர்ச்சுனன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. க. அர்ச்சுனன்.

முற்பகல் 11.20

திரு. க. அர்ச்சுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, "1993-ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கு விண்ணப்பித்த சில மாணவர்கள் தங்கள் விண்ணப்பத்தில் தாங்கள் பெற்ற மதிப்பெண்களுக்கு பதிலாக கூடுதலாக மதிப்பெண்கள் பெற்றதாக காண்பித்து சேர்க்கை அனுமதி பெற்றதன் அடிப்படையில் மேற்படி கல்லூரிகளில் கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்று கூறப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.